15.05.2026

DVC.12/2023

PW–1, ஷோபிகாதேவி த/பெ.தனபாண்டியன்

(மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆஜர். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

இந்த வழக்கானது எனது கணவர் மீதும் எனது கணவர் குடும்பத்தார் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்னாடி எனது கணவரையோ எனது கணவர் குடும்பத்தார் பற்றியோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். திருமண பேச்சு வார்த்தையின் போது எனது கணவர் மத்திய அரசு வேலை செய்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியும். எனது கணவர் தாய் தந்தை இருவரும் சதன் ரயில்வேயில் வேலை பார்க்கிறார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது கணவரின் மாதம் வருமானம் திருமணத்தின் போது எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். மனுதாரர் அவரது கல்வித்தகுதி குறித்து புகாரில் எந்த பத்தியும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. புகாரில் 100 பவுன் நகை எதிர்மனுதாரர்கள் கேட்கவில்லை என்று சொன்னால் 150 பவுன் கேட்டார்கள். 150 பவுன் கேட்டார்கள் என்று எனது புகாரில் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் நான் எனது முதல் தகவல் அறிக்கையில் தெரிவித்துள்ளேன். திருமணத்தின் போது நாங்கள் எவ்வளவு நகை போட்டோம் என்றால் 150 பவுன் கேட்டதற்கு பதிலாக 93 பவுன் எனக்கும் 7 பவுன் எனது கணவருக்கும் ஒரு புல்லட் பைக்கும் எனது வீட்டார் வாங்கி கொடுத்தார்கள். 100 பவுன் நகைக்கான ரசீது நீதிமன்றத்தில் சமர்பிக்கபட்டதா என்றால் இல்லை. 100 பவுனுக்கான போட்டோவோ ஆதாரமோ நீதிமன்றத்தில் சமர்பிக்கபட்டதா என்றால் இல்லை. அதற்கான பட்டியல் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகாரில் 2வது பத்தியில் மனுதாரர் 5 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது என்ற விபரமானது எவ்வாறு கொடுக்கப்பட்டது என்றால் திருமணத்தின் அன்றே

வந்த மொய் பணத்தில் இருந்து எனது தாத்தா, மற்றும் பெரியப்பா சேகர் முன்பும் 11.11.2022 அன்று கொடுக்கப்பட்டது. 15 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் திருமணத்தின் போது கொடுக்கப்பட்டுள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அதுசம்பந்தமான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 11.12.2022 அன்று நடந்த திருமணத்திற்கான செலவுகளை யார் பார்த்தார்கள் என்றால் 2 குடும்பத்தாரும் பார்த்தோம். 01.06.2022 அன்று நிச்சயதார்த்தம் நடந்ததாக 2வது பத்தியில் கூறியுள்ளேன். அதற்கான செலவுகள் யார் பார்த்தார்கள் என்றால் நாங்கள் தான் பார்த்தோம். அந்த செலவுக்கான ரசீதுகள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாசி மகாலில் தான் நிச்சயதார்த்தம் நடந்ததா என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நிச்சயதார்த்ததன்று 10 பவுன் நகை எனது கணவர் வீட்டார் எனக்கு அணிவித்தார்கள் என்றால் 10 பவுன் தாலி கொடி போட்டார்கள். அந்த நகை தற்போது என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. எனது கணவர் வீட்டில் உள்ளது. 10 பவுன் போட்ட விபரத்தை நான் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. எனது கணவர் விவாகரத்து வழக்கு போட்ட பின்பு தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் சரியல்ல. ஆகஸ்ட் மாதமே போட்டுவிட்டேன்.

திருமணம் ஆன பிறகு திருச்சியில் உள்ள எனது கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு தேனிலவு எங்கேயும் சென்றேனா என்றால் சரிதான். ஒரு மாதத்திற்கு பிறகு சென்றேன். திருமணத்தில் இருந்து எனது கணவர் என்னை கொடுமைபடுத்தியதாக சொல்லியது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் என்னுடையது தான். அதில் நானும் எனது கணவரும் முதல்மாத திருமணத்தை கொண்டாடினோம்.**அந்த புகைப்படங்கள் கூடிய பிரிவு 65 பி சான்று (எதிர்மனுதாரர் தரப்பில் அதன் செல்லும் தன்மை குறித்து ஆட்சேபனையுடன் குறியிடு செய்ய்பபடுகிறது (எண்ணம் – 2) எ.ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது நான் தான். **அந்த புகைப்படம் (எண்ணம் – 2 ) எ.ம.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது நான் தான். **அந்த புகைப்படம் (எண்ணம் – 3 ) எ.ம.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது நான் தான். **அந்த புகைப்படம் (எண்ணம் – 3 ) எ.ம.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது நான் தான். **அந்த புகைப்படம் (எண்ணம் – 1 ) எ.ம.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

தேனிலவுக்கு போன செலவுகள் அனைத்தையும் எனது கணவர் தான் ஏற்றுக் கொண்டார் என்றால் சரியல்ல. பாதி செலவுகள் எனது பெற்றோரே ஏற்றுக் கொண்டர்கள். திருமணத்திற்கு முன்பு நான் படித்துக் கொண்டிருந்தேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு நிச்சயதார்த்ததிற்கு பின்பு எனது கணவர் அடிக்கடி பார்க்க வந்தார் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நான் கல்லுரிப் படிப்பை தொடர்ந்தேனா என்றால் தொடர்ந்தேன். அந்த கல்லுரி திருநகரில் அமைந்துள்ளது. கல்லுரியை தொடர நான் திருச்சியிலிருந்து திரும்ப மதுரைக்கு வந்து எனது பெற்றோர் வீட்டில் இருந்து படித்தேனா என்றால் ஒரு முறை இருமுறை படித்து வந்தேன். திருமணத்திற்கு பிறகு எத்தனை நாள் கழித்து கல்லுரிக்கு சென்றேன் என்றால் டிசம்பர் மாதம் நான் கல்லுரிக்கு சென்றேன். என்னை கொடுமைப்படுத்தியதாக எப்போது புகார் கொடுத்தேன் என்றால் மார்ச் மாதம் 14 ம் தேதி 2023ம் வருடம் கொடுத்தேன். அது தொடர்பாக சமூக நலத்துறை அலுவலகத்தில் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு விசாரணையின் போது எனது பொருட்கள் எல்லாத்தையும் பெற்றுக் கொண்டேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் உத்தரவு வாங்கி சில பொருட்களை மட்டும் பெற்றுக் கொண்டேன். அந்த பெற்றுக் கொண்ட பொருட்களின் விபரங்களை நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை.

நான் திரும்ப பெற்றுக் கொண்ட விபரத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த பிறகு எனது கணவர் வேலை பார்க்கும் இடத்திற்கு சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் சம்பந்தமாக ஏதேனும் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. மதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த

புகாரிலும் இந்த வழக்கின் புகாரிலும் எனது முகவரியை மாற்றி கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். காவல் நிலையத்தில் கொடுத்தது எனது பாட்டியின் முகவரி. எனக்கு சகோதர, சகோதரிகள் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது தந்தை மட்டும் தான் சம்பாதிக்கிறார் என்றால் சரிதான். எனது அப்பா திருமணத்தின் போது சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது 15.02.2025ம் தேதி எனது கணவர் வீடான திருச்சிக்கு வந்தேன் என்றால் சரிதான். நான் திருச்சிக்கு வந்ததும் எனது கணவர் வீட்டினர் போலிசாருக்கு தகவல் சொன்னார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு நான் அங்கு செல்லவில்லை. 20.02.2023 ல் இருந்து 27.02.2023ம் வரை நானும் எனது கணவரும் மதுரையில் தான் இருந்தோம் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது எனது அப்பாவின் மாத வருமானம் ரூபாய் 70 ஆயிரம் என்றால் சரிதான். Asset and liability ல் மாதம் செலவு ரூ.20,000/- என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் மாதம் ரூ 1 லட்சம் சம்பாதிப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள Asset and liability Affidavit ல் எனது கணவருக்கு 2 நான்கு சக்கர வாகனங்களும், 2 இருசக்கர வாகனங்களும் உள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பெயரில் வங்கி கணக்கு உள்ளதா என்றால் உள்ளது.

ஆவணங்களை குறியீடு செய்யவேண்டி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.